**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் (கனடா)**
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2019**

# 6 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

## பேச்சுப் போட்டி

## அம்மா

எங்களைப் பெற்றவள் அம்மா. நாங்கள் உலகில் முதலில் கண்ட தெய்வமும் அம்மாவே. பாலூட்டித் தாலாட்டி வளர்ப்பவள் எங்கள் அம்மா. நல்ல உணவுகள் உடைகள் தருவாள். முகம் மலர்ந்து கட்டி அணைப்பாள். முத்தமும் தருவாள். பாட்டுப் பாடியும் வளர்ப்பாள். நாங்கள் குறும்புகள் செய்தால் புத்திமதிகள் கூறுவாள். எம்மை நல்வழிப்படுத்துவாள். நல்லவர்களாக நாம் வாழ வழி காட்டுவாள். நல்வழி காட்டும் அம்மாவை நாம் தினமும் வணங்க வேண்டும். அவரது சொற்கேட்டு நடக்க வேண்டும்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்றார் ஔவைப்பாட்டி. அன்பே வடிவான அம்மாவை மதித்து வாழ்வோம். அவர் பெருமை கொள்ள வாழ்ந்து காட்டுவோம். அம்மாவின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவோம். நல்லவர்களாக நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை செய்வோம்.